# திராவிடத்தால் வாழ்கிறோம்

1282

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

122

## "கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

***'தி.மு.க.வின் வரலாறே ஆபாசமாகப் பேசுவதுதான்' என்று சில அரசியல் தலைவர்களும், நடுநிலையாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களும் அவதூறு பரப்புகிறார்களே?***

"நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்" என்று பழைய திரைப்படப் பாடல் ஒன்று உண்டு. அதுதான், இவர்களின் பேச்சைக் கேட்கும்போது நினைவுக்கு வருகிறது. காங்கிரஸ் மாணிக்கம் தாகூர், பா.ஜ.க. தமிழிசை, தனிக்கட்சி ஆரம்பித்துள்ள அண்ணாமலை போன்றவர்களுடன் திருமாவளவன் போன்றவர்களும் இடதுசாரி தலைவர்களும் சேர்ந்து மண்ணை வாரி இறைத்திருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா காஞ்சிபுரத்தில் போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து நின்ற காங்கிரஸ் சார்பில், அண்ணாவையும் அவர் குடும்பத்தையும் கொச்சைப்படுத்தி பதாகை வைத்தார்கள். இப்படியொரு பதாகையை, இந்த இடத்தில் வைத்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அண்ணாவிடம் தி.மு.க.வினர் சொன்னபோது, 'அந்த இடத்தில் இரவு நேரத்தில் வெளிச்சம் இருக்காது. அதனால், அங்கே ஒரு பெட்ரோமாக்ஸ் லைட் வையுங்கள். இரவிலும் காங்கிரஸாரின் இலட்சணம் தெரியும்' என்றவர் அண்ணா. காங்கிரஸின் மாணிக்கம் தாகூர் ஆபாசம் பற்றிப் பேசலாமா?

தி.மு.க.வின் இளம்தலைவர்-தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசாத நடிகை பற்றி, அவதூறாகப் பேசியதாகப் பொய் வழக்குப் போடப்பட்டதே, அந்த நடிகை பற்றி உண்மையாகவே அவதூறாகவும் ஆபாசமாகவும் பேசியவர், பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர், நயினார் நாகேந்திரன். தமிழிசை போன்றவர்கள் சோற்றில் உப்பு போட்டு சாப்பிடும் வழக்கம் உள்ளவர்களாக இருந்தால், முதலில் கண்டிக்கவேண்டியது அவரது கட்சியின் மாநிலத் தலைவரைத்தான். 'அண்ணாமலை ஓர் ஆபாசக் கிடங்கு' என்று அவர் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவராக இருக்கும்போது, அந்தக் கட்சியினரே தேசியத் தலைமை வரை புகார் செய்திருக்கிறார்கள். கே.டி.ராகவன் தொடங்கி பலரையும் கேட்டால், 'வார் ரூம் லீலைகள்' குறித்த விவரங்கள் தெரியவரும்.

உடன்பிறப்புகளின் கொள்கைச் சகோதரராக இருந்த திருமாவளவனின் அண்மைக் காலப் போக்கு 'ச்சீ... அரசியலுக்காக இப்படியா?' என்று கேட்கும்படி உள்ளது. கழகத்தின் இளந்தலைவர் சொல்லாத வார்த்தையை, அவரும் பிடித்துத் தொங்கியபடி ஆபாசம் கூடாது என்று பாடம் நடத்தியிருக்கிறார். இவர்தான், திரைப்பட நடிகையும் பா.ஜ.க., அ.தி.மு.க எனப் பல கூடாரங்களுக்கு மாறியவருமான காயத்ரி ரகுராமை, 'அவிழ்த்துப் போட்டு நடிக்கும் தற்குறிகள்' என்று விமர்சனம் செய்தவர். கலைஞரைக் கொச்சைப் படுத்தி, ஊடகங்களிடம் பேசியவர், ம.தி.மு.க.வின் வைகோ.



# உரிமைப் போரில் முன்னோக்கிச் செல்வோம்!

இடதுசாரிகளைப் பொறுத்தவரை, "தாங்கள் செய்வது என்னவென்று தெரியாமலே செய்யும் இவர்களை மன்னியும் பிதாவே" என்கிற பைபிள் வரிதான் நினைவுக்கு வருகிறது. காவிரி உரிமைக்காக, விவசாயிகளுடன் நின்று போராடவேண்டியவர்கள் அவர்கள்தான். அவர்கள், தி.மு.க.வுக்கு எதிராகக் கச்சை கட்டி நிற்கிறார்கள். தமிழ்நாட்டு அரசியலில் தி.மு.க.வை வீழ்த்துவதற்காக, சினிமா துறை சார்ந்தவர்களிடம் சரணடைந்து, அவர்களை எந்தளவுக்கு வேண்டுமானாலும் ஆதரிக்கும் வரலாறு அவர்களுடையது என்பதால், 'பொலிட்பீரோ'வைக் கூட்டித் தவற்றை உணரும் வரையில், இதே காரியத்தைச் செய்வார்களோ என்னவோ.

'திராவிட நாயகர்' கழகத் தலைவர் சொன்னதுபோல, காவிரி உரிமைக்கான போராட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தவறாக எதுவும் பேசவில்லை. தவறாகப் பேசும் நோக்கம் கொண்டவருமல்ல. ஒருவேளை, தவறான சொற்கள் வெளிப்பட்டால் அதற்காக வெளிப்படையாக வருத்தம் தெரிவிக்கக்கூடியவர். அவர் அப்படி எதுவும் பேசவில்லை. அதனால்தான், சட்டப் போராட்டத்தின்மூலம் வெற்றி பெற்றிருக்கிறார்.

**...வினா தொடரும்.**

## பண்பாட்டு அடையாளங்களுக்கு பட்ஜெட்டில் ஜீரோ!

'தமிழர் வரலாறு, மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டிய துறைகளுக்கு, இந்த பட்ஜெட்டில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்படாதது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது' என முகநூலில் முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்த கருத்து, சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவிவருகிறது.

"தமிழ் வளர்ச்சித் துறைக்கு, இந்த நிதியாண்டில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைக்கூட தெளிவாக அறிவிக்காதது, இந்தத் துறையின் மீதான அரசின் முன்னுரிமையைக் கேள்விக்குறியாக்குகிறது. தொல்லியல் துறைக்கு, வெறும் ஒரு கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமையான தமிழர் நாகரிகத்தை ஆய்வுசெய்து, பாதுகாத்து, உலகிற்கு எடுத்துச் செல்லவேண்டிய ஒரு துறைக்கு, இந்த அளவிலான நிதி போதுமானதா என்ற கேள்வி எழுகிறது.

குறிப்பாக, 'கீழடி', 'பொருநை நாகரிகங்கள்' போன்ற தமிழரின் தொன்மையான பண்பாட்டு அடையாளங்களைத் தொடர்ந்து ஆய்வுசெய்து பாதுகாப்பதற்காக, எந்த விதமான தனி நிதி ஒதுக்கீடும் இந்த பட்ஜெட்டில் இடம்பெறாதது கவலைக்குரியது.

தமிழரின் வரலாற்றுப் பெருமையைப் பற்றிப் பேசுவது மட்டுமல்ல, அதை ஆதாரபூர்வமாக ஆராய்ந்து, பாதுகாக்கத் தேவையான முதலீட்டைச் செய்வதே ஒரு அரசின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை, இந்த பட்ஜெட் நிறைவேற்றியுள்ளதா என்பது, மக்களிடம் எழும் மிக முக்கியமான கேள்வியாக உள்ளது, எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பதிவு, தொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டுவருகிறது.

## ஃப்ளாஷ்பேக்





வி.பாபு


### இளைஞர்களின் எழுச்சி, மட்டற்ற மகிழ்ச்சி!

1985-ஆம் ஆண்டில், என் 25 வயதில் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தேன். கழகம் ஆணையிடும் பல போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளேன். இந்தப் படம் 1990-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், சேலம் வருகைதந்தார். அப்போது, அவருக்கு மரியாதை செய்தபோது எடுத்த படம். அரிசிப்பாளையம் இளைஞர் அணி அமைப்பாளராகவும் நெசவாளர்கள் மற்றும் வணிகர் அணியிலும் செயல்பட்டுள்ளேன். இப்போது, என்னுடைய 66 வயதில், தற்போதுள்ள இளைஞர்கள் கழகத்தில் வீச்சாகச் செயல்படுவது கண்டு, மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**- வி.பாபு, அரிசிப்பாளையம், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


# வலை யோசை



**Panneer Perumal**

இதே திருச்சியில் செய்தியாளர்களைச் சந்திக்காமல் ஒருத்தர் ஓடுனார்.. ஓடுனார்.. வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடுனார். நினைவு இருக்கா?



**Jeeva Sagapthan**

வேளாண் பட்ஜெட் திருப்பதிக்குப் போகிறது.
சட்டசபைக்குள் ஜெபமாலை வருகிறது.
மதச்சார்பற்றத்தன்மை எங்கே போகிறது..?



**Aadhavan Dheetchanya**

ஹலோ வெற்றி, நான் வெற்றி பேசுறேன். உங்கூட்ல எல்லா வெற்றிகளும் நலமா? ஆங், எங்கூட்ல பெரியவெற்றி, நடுவெற்றி, சின்னவெற்றி எல்லாரும் நலமே.




## ம்லருவூக

### தி.மு.க. சட்டமன்ற நுழைவும் பத்திரிகைகளும்...

1957-ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான், கழகத்தின் பணிகள் குறித்து, ஆங்கில ஊடகங்கள் கவனித்து எழுதத் தொடங்கின. வடமாநில ஏடுகள், தமது கண்ணோட்டத்தை வெளியிடத் தொடங்கி இருந்தன. சட்டமன்றத்தில், முதன் முதலில் கழகம் விவாதங்களில் கலந்துகொள்ளத் தொடங்கியிருந்ததை, மிகவும் சிறப்பித்து எழுதி இருந்தனர். டெல்லியிலிருந்தும் பம்பாயிலிருந்தும் வெளிவந்த 'டைம்ஸ் ஆஃப் இந்தியா', 'சென்னைக் கடிதம்' எனும் தலைப்பில் செய்திகளை வெளியிட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900